# 2020 ம் ஆண்டு ஜீலை மாதம் 31 ஆம் தேதி வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விருத்தாசலம் நகர்மன்றத்தின் சாதாரன கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை :
திரு. சி. பாண்டு,
நகராட்சி பொறியாளர் மற்றும்
தனி அதிகாரி(பொ),
விருத்தாசலம் நகராட்சி.

<u>பொருள் எண். 1.</u>

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 16, வடக்கு பெரியார் நகர் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் புதியதாக புதியதாக போர்வெல் அமைத்து, புதிய 35 எச்.பி மோட்டார் இறக்கப்பட்டுள்ளது. மேற்படி புதிய போர்வெல்லின் 35 எச்.பி மோட்டார் மின் இணைப்பு பெற மின்வாரிய அலுவலகத்திற்கு விண்ணபப்ம் அளிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் மேற்படி மின் இணைப்பு பெற மதிப்பீட்டு தொகை ரூ. 46,650/– செலுத்த மின்வாரியத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகை ரூ. 46,650/– மின்வாரியத்திற்கு வங்கி வரைவோலையாக செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்படி மதிப்பீட்டு தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண். 2.</u>

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 17, பூந்தோட்டம் காலணி கடைசி தெருவில் உள்ள புதிய போர்வெல் அமைத்து 35 எச்.பி மோட்டார் இறக்கப்பட்டுள்ளது. மேற்படி புதிய போர்வெல்லின் 35 எச்.பி மோட்டார் மின் இணைப்பு பெற மின்வாரிய அலுவலகத்திற்கு விண்ணபப்ம் அளிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் மேற்படி மின் இணைப்பு பெற மதிப்பீட்டு தொகை ரூ. 46,650/– செலுத்த மின்வாரியத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகை ரூ. 46,650/– மின்வாரியத்திற்கு வங்கி வரைவோலையாக செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்படி மதிப்பீட்டு தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண். 3.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட பாத்திமா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிக்கு சொத்துவரி நிர்ணயம் செய்ததை எதிர்த்து மேற்கண்ட பள்ளி நிர்வாகம் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண். WP.No. 26574/2018ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி அரசு வழக்கறிஞரான உயர்நீதி மன்ற வழக்கறிஞர் R.P. பிரதாப்சிங் வழக்கில் ஆஜராக வாதாடிய வழக்கறிஞர் கட்டணம் ரூ. 10000/– ஐ செலுத்த கோரி கடிதம் அனுப்பியுள்ளார். சூமற்படி செலவின தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 6211/2018/அ1)

பொருள் எண். 4.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 10ல் டாக்டர் லூக்காஸ் தெருவில் ஆழ்துளை கிணறு அமைந்துள்ள நிலையில் டாக்டர் லூக்காஸ் தெருவில் பொது மக்களுக்கு குடிநீர் பற்றாக்குறை காரணமாக HDPE ஒஸ், கேபிள் ஒயர் மற்றும் 15 எச்.பி மேட்டார் தெரு பைப்லைனில் இணைப்பதற்கு 150 மீட்டர் 3” PVC பைப் போன்ற பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 3,64,000/– க்கும் ஆகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தொகையை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 6211/2018/அ1)

பொருள் எண். 5.

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு 2019–20 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் பதிவேடுகள் மற்றும் படிவங்கள் ஆகியவை வாங்குவதற்கு நகர்மன்றம் தீர்மானம் எண். 3377, நாள். 31.05.2019ல் ரூ. 5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம்) அனுமதியளித்துள்ளது. அதன்படி தமிழ்நாடு மல்டி பர்பஸ் இண்ட்கோ சர்வ் நிறுவனத்திலிருந்து பதிவேகள் மற்றும் படிவங்கள் ஆகியவை வாங்கப்பட்டதால் அதற்குண்டான பட்டியல் .. 5,02,023/– க்கு வரப்பெற்றுள்ளது. எனவே கூடுதலாக உள்ள செலவினம் ரூ. 2023/– க்கு சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கிட மன்றப்பொருள் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தொகை ரூ. 2023/– ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**பொருள் எண். 6.**

இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் TN-31-AL-1127 வாகனத்தில் சென்சார் பழுது அடைந்து உள்ளதை சரிசெய்திடவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 20250/– க்கும் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. (மன்ற தீர்மான எண். 3794, நாள். 28.02.2020) மார்ச் 2020 முதல் மே 2020 வரை கொரோனா லாக்டவுன் என்பதால் வாகனத்தினை தற்சமயம் சரிசெய்து அதற்கான பட்டியல் தொகை ரூ. 23,839/– வரப்பட்டுள்ளது. கூடுதலாக வரப்பட்டுள்ள பழுதுநீக்க செலவினம் பட்டியல் தொகை ரூ. 3589/– ஐ சுகாதார பணியின் அவசரம் அவசியம் கருதி TVS Motors, கடலூர் அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 0662/2020/எச்1)**

**பொருள் எண். 7.**

இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண். TN-31-AL-1130 டாடா ஏஸ் வாகனத்தில் ரேடியேட்டர், வாட்டர் பம்ப், 2 பேரிங், ஸ்டேரிங், ஆயில் கூடல் மற்றும் ஆயில் ஆகியவை பழுது ஏற்பட்டமையால் பொது சுகாதார பணி அவசியம் அவசரம் கருதி ஓட்டுனரே செலவினத்தை மேற்கொண்டுள்ளார். ஓட்டுனரால் செலவிடப்பட்ட தொகையின் ரசீது நகல் சமர்பிக்கப்பட்டுள்ளது. எனவே செலவு செய்த ரூ. 3410/– ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2759/2020/எச்1)**

**பொருள் எண். 8.**

இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண். TN-31-AL-1127 டாடா சூப்பர் ஏஸ் வாகனத்திற்கு 22.07.2020 ம் தேதியோடு முடிவடைவதால் தகுதிச்சான்று பெற மேற்படி வாகனத்தின் பழுதுகளை சரி செய்திட வாகனத்தில் உள்ள பழுதுகள் குறித்து வாகனத்தின் ஓட்டுனர் குறிப்பு தந்துள்ளார். எனவே அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான விஜயலட்சுமி ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனத்திடமிருந்து தோராய மதிப்பீடு பெறப்பட்டுள்ளது. ஆகையால் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு தோராய செலவினம் ரூ. 90,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப்பணி அவசியம் கருதி மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண். 2835/2020/எச்1)**

பொருள் எண். 9.

சென்னை உயர்நீதி மன்றத்தின் WP.No. 32229/2009 ன் உத்தரவு நாள். 18.11.2019ல் திருமதி. இ. பிரபாவதி என்பவர் 16.09.1989ல் சத்துணவு பொருப்பாளராக பணிபுரிந்து வந்த போது தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டதை தொடர்ந்து அன்னார் தொடர்பான தக்க உத்தரவு பிறப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப்பொருள் தொடர்பாக இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 6639/2019/சி2, நாள். .05.2020ல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு உஉாய பிரேரணை அனுப்பப்பட்டதில், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) செயல்முறைகள் ந.க.பிடி1,/401/2020, நாள். 15.07.2020ல் அரசு விதிகளின்படி பணிபுரியாத காலத்திற்கு ஊதியம் வழங்க இயலாது எனவும் மனுதாரரின் கோரிக்கையை ஏற்க இயலாது எனவும் தெரிவித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

இப்பொருள் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்ற அரசு வழக்கறிஞர் திரு. ந. ஏழுமலை என்பவர் உயர்நீதிமன்றத்தில் பதிலுரை தாக்கல் செய்திட கட்டணம் ரூ. 15000/– மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சார்பில் வழங்கிட தெரிவித்துள்ளார். எனவே திரு. ந. ஏழுமலை அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு ரூ. 15000/– கட்டணம் வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 6639/2019/சி2)

பொருள் எண். 10.

விருத்தாசலம் நகராட்சியில் புதியதாக வாங்கப்பட்ட பேட்டரி ஆப்பரேட்டர் வாகனங்களுக்கு (Battery Operated Vehicle) பேட்டரி ரீசார்ஜ் செய்யவும், மழைகாலங்களில் மழையிலிருந்து மேற்படி வாகனங்களை பாதுகாக்கவும், வார்டு எண். 16 வடக்கு பெரியார் நகர் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் ரீசார்ஜ் வசதியுடன் கூடிய ஷெட் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 190000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளாலாம்.

பொருள் எண். 11.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 13 சேக்கிழார் தெருவில் (கிழக்கு பகுதி) சிமெண்ட் சாலை அமைக்கும் ம்ணி நடைபெற்ற போது அப்பகுதிக்கும் விடுபட்ட பகுதிக்கும் சேர்த்து சிமெண்ட் சாலை அமைத்து தர அப்பகுதி பொது மக்கள் நேரில் கேட்டுக்கொண்டதற்கிணங்க, விடுபட்ட பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 80000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளாலாம்.

### <u>பொருள் எண். 12.</u>

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 2.00 இலட்சம் மதிப்பில் பாலக்கரை பேருந்து நிழற்குடையில் பயணிகள் இருக்கை அமைக்கும் பணிக்கு 08.05.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திருமதி. கே. சாந்தி | மதிப்பீட்டைவிட 0.17 சதவிகிதம் குறைவு. |
| 2. | திரு. கே. சிவகுருநாதன் | மதிப்பீட்டைவிட 1.68 சதவிகிதம் அதிகம். |

அலுவலக குறிப்பு.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 1ல் காணும் திருமதி. கே. சாந்தி, ஒப்பந்ததாரர் அவர்கள் வழங்கியுள்ள 0.17 சதவிகிம் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15)ன் கீழ் ஏற்று பணி உத்தரவு வழங்கி பணி நல்லமுறையில் செய்து முடிக்கப்பட்டு பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

### <u>பொருள் எண். 13.</u>

சென்னை உயர்நீதி மன்றத்தில் WP. No. 32229/2019ல் திருமதி. எஸ். பிரபாவதி முன்னாள் சத்துணவு அமைப்பாளர் தொடர்ந்த வழக்கின் 18.11.2019 தேதிய தீர்ப்புரையின் மீது, திரு. ஆர்.பி. பிரதாப் சிங், நகராட்சி வழக்கறிஞர் அவர்கள் 03.02.2020 ல் தனது கருத்துரை வழங்கியுள்ளார்கள். மேற்படி கருத்துரைக்கு அன்னார் கட்டணமாக ரூ. 2000/– வழங்கிட கோரியுள்ளார். மேற்படி தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.** அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 6639/2019/சி2)**

### <u>பொருள் எண். 14.</u>

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 7 எம்.ஆர்.கே நகரில் உள்ள பழைய மழைநீர் வடிகால் உடைந்து சேதமடைந்ததால், மழைநீர்செல்ல முடியாமல் உள்ளதால் மேற்படி வடிகாலுக்கு பதிலாக புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கவும் மேலும் அப்பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 8,15,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண். 2740/2020/இ1)**

<u>பொருள் எண். 15.</u>

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 7 துர்கை நகரில் சிமெண்ட் சாலை அமைத்து தரக்கோரி அப்பகுதி பொதுமக்கள் மனு அளித்ததற்கிணங்க, மேற்படி பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 9,45,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண். 2810/2020/இ1)**

<u>பொருள் எண். 16.</u>

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் உள்ள மினி OHT மற்றும் நேரடி மின்மோட்டார்களில் கட்டை கட்டுதல், சர்வீஸ் பைப், பேனல் போர்டு மற்றும் ஒயரிங் செய்யும் பணிக்கு அப்பகுதி பொதுமக்களின் நலன்கருதி போர்கால அடிப்படையில் பழுதுநீக்கும் பணிக்கு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | வார்டு எண் 31 மேட்டுக்காலணி மாரியம்மன் கோயில் தெரு மினி OHTக்கு பேனல் போர்டு மற்றும் ஒயரிங் செய்யும் பணி. | திரு.கே.சிவகுருநாதன், ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 18910/— |
| 2. | வார்டு எண் 32 பெண்ணாடம் ரோடு கருணாநிதி நகர் 1வது தெரு மினி OHTக்கு கட்டை கட்டுதல் , பேனல் போர்டு மற்றும் ஒயரிங் செய்யும் பணி. | திரு.கே.சிவகுருநாதன், ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 18420/— |
| 3. | வார்டு எண் 33 கருப்பனார் கோயில் தெரு மினி OHTக்கு சர்வீஸ் பைப் , பேனல் போர்டு மற்றும் ஒயரிங் செய்யும் பணி. | திரு.கே.சிவகுருநாதன், ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 18050/— |
| 4. | வார்டு எண் 2 புதுக்குப்பம் டேனிஷ் மிஷன் பள்ளி அருகில் உள்ள Direct மோட்டார் கட்டை கட்டுதல் , சர்வீஸ் பைப் , பேனல் போர்டு மற்றும் ஒயரிங் செய்யும் பணி. | திரு.கே.சிவகுருநாதன், ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 28500/— |
| 5. | வார்டு எண் 16 பெரியார் நகர் தெற்கு எம்.ஜி.ஆர் நகர் Direct மோட்டார் கட்டை கட்டுதல் , சர்வீஸ் பைப் , பேனல் போர்டு மற்றும் ஒயரிங் செய்யும் பணி. | திரு.கே.சிவகுருநாதன், ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 27900/— |
| 6. | வார்டு எண் 2 புதுக்குப்பம் டேனிஷ் மிஷன் பள்ளி பின்புறம் மற்றும் வார்டு எண் 12 ஓம் சக்தி கோயில் அருகில் உள்ள மினி OHTக்கு சர்வீஸ் பைப் , பேனல் போர்டு , பாக்ஸ் வெல்டிங் மற்றும் ஒயரிங் செய்யும் பணி | திரு.கே.சிவகுருநாதன், ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 9800/— |

அலுவலக குறிப்பு. மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள் எண். 17.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட மணிமுத்தாற்றில் பொங்கல் ஆற்றுதிருவிழாவினை முன்னிட்டு தற்காலிகமாக மின்விளக்குகள் அமைக்கும் பணிக்கு பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட மணிமுத்தாற்றில் பொங்கல் ஆற்றுதிருவிழாவினை முன்னிட்டு தற்காலிகமாக மின்விளக்குகள் அமைக்கும் பணி | ராசி அண் கோ, ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 44000/– |

அலுவலக குறிப்பு. மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள் எண். 18.

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 2,50,000/– மதிப்பீட்டில் நகராட்சிக்கு தேவையான 5 எண்ணிக்கை கணிப்பொறி , பிரிண்டர் ,UPS மற்றும் ஸ்கேனர் வாங்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3842,நாள்.29.05.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 02.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | M/s Guhan Builders & Promoters,<br>1/39 , East Street, Kumudimoolai | (-) 0.18 % குறைவு |
| 2. | M/s Printer Care,<br>28/75, Bunglow Street , Pudupettai ,<br>Vriddhachalam | (+) 3.00 % அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் M/s Guhan Builders & Promoters, 1/39 , East Street,Kumudimoolai நிறுவனம் அளித்துள்ள 0.18 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசரம் அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1759 /2020/இ1)

பொருள் எண். 19.

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 3,40,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 7 எம்.ஆர்.கே நகர் ஆறுமுகம் தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய சிறுபாலம் அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3880,நாள்.30.06.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 24.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.ஏ.மதியழகன், ஒப்பந்ததாரர் | (-) 0.09 % குறைவு |
| 2. | திரு.கே.சிவகுருநாதன், ஒப்பந்ததாரர் | (+) 1.06 % அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.ஏ.மதியழகன், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.09 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 993 /2020/இ1)

பொருள் எண். 20.

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 4,30,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 1 வயலூர் காலணியில் சிமெண்ட் சாலை ,மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3888,நாள்.30.06.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 24.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.ஏ.மதியழகன், ஒப்பந்ததாரர் | (-) 0.05 % குறைவு |
| 2. | திரு.கே.சிவகுருநாதன், ஒப்பந்ததாரர் | (+) 0.18 % அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.ஏ.மதியழகன், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.05 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 993 /2020/இ1)

பொருள் எண். 21.

இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் Fogging Machine Gas Cylinder சப்ளை செய்யும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண். 3874, நாள். 30.06.2020 ல் அனுமதி அளித்துள்ளதற்கிணங்க, 23.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Prime Agencies,<br>Authorised Dealer,<br>No. 34/86, South Fort Street,<br>Virudhachalam. | Gas Cylinder<br>(ஒன்றின் விலை)<br>ரூ. 210/– |
| 2. | Jayam Electricals,<br>Authorised Dealer,<br>No. 4/33, jagirhuzen Street,<br>Kasthuribhai Nagar,<br>Tambaram West,<br>Chennai 600 045. | Gas Cylinder<br>(ஒன்றின் விலை)<br>ரூ. 220/– |
| 3. | Mathaji Electrical,<br>Electrical Engineers Distributors,<br>No, 222/A, Eswaran Nagar,<br>Avadi Road, Redhills,<br>Chennai. | Gas Cylinder<br>(ஒன்றின் விலை)<br>ரூ. 225/– |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் காணும் Prime Agencies, Authorised Dealer, No. 34/86, South Fort Street, Virudhachalam என்ற நிறுவனம் அளித்துள்ள குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.
   (ந.க. எண். 2329/2020/எச்1)

பொருள் எண். 22.

இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கும் வாகனம் எண். TN-31-AZ-3057 க்கு முன்பக்க டயர் இரண்டு மாற்றி அமைக்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண். 3873, நாள். 30.06.2020 ல் அனுமதி அளித்துள்ளதற்கிணங்க, 23.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | விஜய லெட்சுமி ஆட்டோ மொபைல்ஸ்,<br>செம்மண்டலம்,<br>கடலூர்–1. | (2 டயர் Size 8.25/16)<br>ரூ. 27520/– |
| 2. | சுரவணா ஆட்டோ மொபைல்ஸ்,<br>செம்மண்டலம்,<br>கடலூர்–1. | (2 டயர் Size 8.25/16)<br>ரூ. 28678/– |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் காணும் விஜய லெட்சுமி ஆட்டோ மொபைல்ஸ், செம்மண்டலம், கடலூர்–1. என்ற நிறுவனம் அளித்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

   (ந.க. எண். 2074/2020/எச்1)

பொருள் எண். 23.

இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனங்கள் TN-91-S-0664, TN-91-S-0605, TN-91-S- 0687 மற்றும் TN-91-S-0624 ஆகியவற்றில் கட்டில் இரண்டு பட்டை சேர்த்து 4 வீல் பகுதியில் கிரீஸ் பேக்கிங் செய்து மாற்றி அமைக்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண். 3871, நாள். 30.06.2020 ல் அனுமதி அளித்துள்ளதற்கிணங்க, 23.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வாகனம் எண் | நிறுவனத்தின் பெயர் | |
|---|---|---|---|
| | | விஜயலட்சுமி ஆட்டோ மொபைல்ஸ், கடலூர். | சரவணா ஆட்டோ மொபைல்ஸ், கடலூர். |
| | | விலை ரூ. | விலை ரூ. |
| 1. | TN-91-S-0664 | 15930/– | 17582/– |
| 2. | TN-91-S-0605 | 15930/– | 17582/ |
| 3. | TN-91-S- 0687 | 15930/– | 17582/ |
| 4. | TN-91-S-0624 | 15930/– | 17582/ |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விஜயலட்சுமி ஆட்டோ மொபைல்ஸ், கடலூர் என்ற நிறுவனம் அளித்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

பொருள் எண். 24.

ஆணையர், திருத்துறைப்பூண்டி நகராட்சி அவர்களின் கடித ந.க.எண். 5326/17/சி1, நாள். 18.09.2017ல் விருத்தாசலம் நகராட்சியில் 20.09.2013 முதல் 15.09.2015 வரை மேலாளராக பணிபுரிந்த திரு. ஆ. நாராயணசாமி என்பவர் 31.06.2018ல் ஓய்வு பெற உள்ளதால் தடையின்மை சான்று கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி கடிதத்தினை தொடர்ந்து ஆய்வு செய்ததில் தணிக்கை அறிக்கை 2011–2012 ல் பத்தி எண். 65லும், 2012–2013 பத்தி எண். 62லும் அன்னாருக்கு ஆறாவது ஊதியக்குழு ஊதியம் நிர்ணயம் செய்ததில் ரூ. 2,86,389/– மிகை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது என தணிக்கைத் தடை விவரத்தினை குறிப்பிட்டு இவ்வலுவலக கடிதம் மூலம் தெரிவித்து தடையில்லா சான்று அனுப்பப்பட்டது.

அதனை தொடந்து ஆணையர், திருத்துறைப்பூண்டி நகராட்சி அவர்களின் கடித ந.க.எண். 5326/17/சி1, நாள். 23.03.2018.ல் மேற்படி தணிக்கை பத்தியில் குறிப்பிட்டுள்ள குறைகள் நிவர்த்தி செய்யும் பொருட்டு திருத்திய ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டு ரூ. 286397/– மிகை ஊதியத்தை பிடித்தம் செய்ய உத்தரவிடப்பட்டு நடவடிக்கையில் உள்ளதாகவும், இந்நிலையில் திரு. ஆ. நாராயணசாமி, மேலாளர் தான் ஓய்வு பெறவுள்ள காலம் குறுகிய காலமாக உள்ளதால் தனது ஓய்வூதிய பணப்பயன்களில் மேற்படி தொகையை பிடித்தம் செய்துகொள்ள உறுதிமொழி கடிதம் அளித்துள்ளதால் நிலுவைத் தொகையில் பிடித்தம் செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் அன்னார் 30.06.2018 ல் பணி ஓய்வு பெறவுள்ளதால் பணி ஓய்வை கருத்திற்கொண்டு அன்னார் பணி ஓய்வு பெற தடையின்மை சான்று வழங்க கோரப்பட்டது.

அதன்படி பார்வை 4ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் அன்னாரின் ஓய்வூதிய பணப்பயன்களில் மேற்படி மிகை ஊதியத்தொகையை பிடித்தம் செய்து இந்நகராட்சிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையின்படி ஓய்வுபெற அனுமதிக்கலாம் என தெரிவித்து மீள தடையின்மை சான்று திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு அனுப்பப்பட்டது.

இந்நிலையில் திரு. ஆ. நாராயணசாமி, மேலாளர் (ஓய்வு) சென்னை உயர் நீதி மன்றம் வழக்கு எண். 20342/2019ல் தன்னுடைய ஓய்வு கால பணப்பயனில் மிகை ஊதியத்தை பிடித்தம் செய்தது தவறு எனவும் அதனை திரும்ப வழங்க தெரிவித்தும் விருத்தாசலம் நகராட்சி ஆணையாளர் அவர்களை 4வது பிரதிவாதியாக கொண்டு வழக்கு தொடர்ந்ததினை அடுத்து மேற்படி வழக்கில் சென்னை உயர் நீதி மன்ற வழக்கறிஞர் திரு. ஆர். பி. பிரதாப் சிங் அவர்கள் வழக்கில் ஆஜராகி வழக்கை நடத்தியதற்கும் அதற்கான வழக்குரை கட்டணம் ரூ.10000/ வழங்கவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்: 5157/2017/சி1,

பொருள் எண். 25.

விருத்தாசலம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் ரூ. 1,30,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 13 காட்டுக்கூடலூர் ரோடு மற்றும் திருவள்ளுவர் நகர் 6,7,8,9 தெருக்களில் புதிய பைப்லைன் அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3869,நாள்.30.06.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 21.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.வி.ரமேஷ்,<br>ஒப்பந்ததாரர் | (-) 0.16 % குறைவு |
| 2. | ராசி அண் கோ ,<br>ஒப்பந்ததாரர் | (+) 0.72 % அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.வி.ரமேஷ், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.16 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 5978 /2020/இ2)

பொருள் எண். 26.

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண். TN-31-AZ-1127 க்கு தகுதிச்சான்று பெறுவதற்கு வாகனத்திலுள்ள பழுதுகளை அகற்றும் பணிக்கு 23.07.2020 அன்று ஒஒபபந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மமனறத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1. | விஜயலட்சுமி ஆட்டோ மொபைல்ஸ்,<br>கடலூர். | 87792/– |
| 2. | ஓம் சக்தி என்ஜினியரிங் ஒர்க்ஸ்,<br>கடலூர். | 94046/– |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் காணும் விஜயலட்சுமி ஆட்டோ மொபைல்ஸ், கடலூர் என்ற நிறுவனம் அளித்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண். 2835/20/எச்1)

பொருள் எண். 27.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16ல் தெற்கு பெரியார் நகர் காமராஜர் தெருவில் உள்ள இரண்டு சிறுபாலம் பழுதடைந்து உள்ளதால் அவற்றை பழுதுநீக்கம் செய்து தரக்கோரி அப்பகுதி மக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க , மேற்படி இரண்டு சிறுபாலம் பழுது நீக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.94,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

பொருள் எண். 28.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 32 காந்தி நகர் 3வது தெரு நீட்டிப்பு கிழக்கு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் பழுதடைந்து உள்ளதால் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி சுகாதார சீர்கெடு எற்படுவதாக அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுதற்கிணங்க , அப்பகுதியில் புதியதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கவும் , மேலும் பழைய மழைநீர் வடிகாலின் பக்கசுவற்றினை உயரப்படுத்தவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3,75,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

பொருள் எண். 29.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 32 காந்தி நகர் 3வது தெரு நீட்டிப்பு வடக்கு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் பழுதடைந்து உள்ளதால் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி சுகாதார சீர்கெடு எற்படுவதாக அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுதற்கிணங்க , அப்பகுதியில் புதியதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5,40,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**பொருள் எண். 30.**

நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.27611/2016/WS1 , நாள்.07.07.2020ல் கடலூர் மாவட்டத்திற்கு Sustainable Water Security Mission(SuWaSeM) திட்டத்தின் கீழ் ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் , விருத்தாசலம் நகராட்சியில் மேற்படி தொகைக்கு குளம் மேம்படுத்தும் பணிக்கு கருத்துரு தயார் செய்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,கடலூர் அவர்களிடம் சமர்ப்பித்து நிர்வாக அனுமதி பெற்று பணி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதற்கிணங்க , இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2 கண்டியங்குப்பம் குளம் மேம்படுத்தும் பணிக்கு ரூ.4.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து (Sustainable Water Security Mission(SuWaSeM) திட்டத்தின் கீழ் ரூ.2.00 இலட்சம் , நகராட்சி பொது நிதி பங்களிப்பு ரூ.2.00 இலட்சம்) கருத்துரு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி கருத்துரு அனுப்பியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 31.**

விருத்தாசலம் நகராட்சியின் 2019–2020 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு.

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 32.**

விருத்தாசலம் நகராட்சி பகுதிகளில் அனுமதியில்லாமல் அமைக்கப்பட்டு 20.10.16க்கு முன் முழுவதும் விற்கப்பட்ட அனுமதியற்ற மனை பிரிவுகளை அரசாணை எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை, நாள். 04.05.2017, அரசாணை எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை, நாள். 13.10.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 13193/2017/எல் ஏ1, நாள். 27.03.2018ன்படி Sold plot frame work அனுமதி நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களால் கீழ்கண்ட மனைப்பிரிவுகளின் சாலைகளை பொது உபயோகங்களுக்காக நகர் மன்றம் உரிய தீர்மானம் இயற்றி எடுத்துக்கொண்டு அதன் பிறகு விற்கப்பட்ட தனி மனைகளை வரன்முறை செய்யவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் சாலைகளை எடுத்துக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

விபரம் கீழ்வருமாறு:

| வ.எண். | மனைபிரிவின் பெயர் | கிராமத்தின் பெயர் மற்றும் சர்வே எண் | நகர் ஊரமைப்பு அனுமதி உத்தரவு எண் மற்றும் நாள். |
|---|---|---|---|
| 1. | செல்வராஜ் நகர் | விருத்தாசலம் கிராமம் | SPF. No. 66 Virudhachalam (MP) /2018, நாள். 29.11.2019. |
| 2. | தமிழ்நகர் | மணலூர் | SPF. No. 19 Virudhachalam (MP) /2018, நாள். 15.06.2020. |

மேற்கண்ட பொது சாலைகளை உள்ளாட்சி சாலையாக மன்றம் அங்கீகரிக்கலாம்.

அலுவலக குறிப்பு :

நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்கவும், அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கிணங்கவும் மேற்படி மனை பிரிவில் அமையும் சாலைகளை பொது சாலையாக ஏற்று அறிவிக்கலாம்.

(ந.க.எண். 2349/17/எப்1)

<u>பொருள் எண். 33.</u>

விருத்தாசலம் நகராட்சியின் பொது சுகாதார பிரிவு 33 வார்டுகளிலும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வீடு வீடாக குப்பைகளை தரம் பிரித்திட திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் 8 ஓட்டுனர்கள் விருத்தாம்பிகை மகளிர் சுய உதவிக்குழு தெற்கு தெரு, விருத்தாசலம் அவர்களின் மூலம் இந்நகர்மன்ற தீர்மான எண். 3113, நாள். 27.08.2018ந் தேதிய தீர்மானத்தில் அனுமதி பெற்று தற்காலிகமாக நகராட்சியில் பணிபுரிந்து வரும் சூழ்நிலைகளில் அதற்கான அனுமதி காலம் முடிவடைந்த நிலையில் தற்போது பணியின் அவசரம் அவசியம் கருதி விருத்தாம்பிகை மகளிர் சுய உதவிக்குழு தெற்கு தெரு, விருத்தாசலம் அவர்களின் வாயிலாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சந்தை விகிதத்தில் ஓட்டுனர்களை மார்ச் 2021 வரை அமர்த்தி பணி மேற்கொள்ளவும், அதற்கான அனுமதியும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணி என்பதால் அவசர அவசியம் கருதி மேற்படி ஓட்டுனர்களை சுய உதவிக்குழு மூலம் அமர்த்திக்கொள்ளவும், பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2508/2018/எச்1)

<u>பொருள் எண். 34.</u>

விருத்தாசலம் நகராட்சியின் பொது சுகாதார பணி மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் 77 பணியாளர்களைக் கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வரப்பெற்றது. மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். M2/14889/2017, நாள். 08.07.2019ன்படி நாள் ஒன்றுக்கு ரூ. 395/– வீதம் ஊதியம் வழங்கிட விருத்தாம்பிகை மகளிர் சுய உதவிக்குழு, விருத்தாசலம் அவர்களின் வாயிலாக இந்நகர்மன்ற தீர்மான எண். 3710, நாள். 31.12.2020ல் அனுமதி பெறப்பட்டது. தற்பொழுது அனுமதி காலம் முடிவடைகின்ற காரணத்தால் பொது சுகாதாரம் நலன் மற்றும் அவசர அவசியம் கருதி பணி பாதிக்காத வண்ணம் தொர்ந்து 2020–2021 ஆம் ஆண்டிற்கு துப்புரவு பணி மேற்கொள்ளவும் அதற்கான அனுமதியும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணி அத்தியாவசியம் மற்றும் அவசர அவசியம் கருதி மேற்படி பணியாளர்களை விருத்தாம்பிகை மகளிர் சுய உதவிக்குழு மூலம் அமர்த்திக்கொள்ளவும், அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 289/2012/எச்1)

## பொருள் எண். 35.

விருத்தாசலம் நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் இயங்கி வரும் வாகனங்களுக்கு ஆண்டு தோறும் எடுக்கப்படும் இன்சூரன்ஸ், சாலை வரி, 1 சதவிகிதம் வரி மற்றும் பசுமை வரி புதுப்பிப்பதற்கு 2020– 2021 ஆம் ஆண்டிற்கு செலுத்திடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 5,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பொருள் குறித்த செலவின தொகையினை 2020–2021 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4171/2017/எச்1)